Samsaram. V.V. Ramakrishn

சம்சாரம்

-தமிழ்-

ஜெமினி சித்ரம்

இப்புத்தகத்தின் விலை அணா 2

நடிகர்கள்

புஷ்பவல்லி	மஞ்சுளா
எம். கே. ராதா	கோபு
வனஜா	கமலா
ஸ்ரீராம்	வேணு
டி. ஆர். ராமச்சந்திரன்	சீதாராம்
சுந்தரிபாய்	காமாக்ஷி
டி. பாலசுப்பிரமணியம்	கனகசபாபதி
ஆர். பாலசுப்பிரமணியம்	டாக்டர்
கே. என். கமலம்	செல்லம்மா
டி. எம். கமலவேணி	வெங்கம்மா
சேது	பாலு (பெரியவன்)
அனில்குமார்	பாலு (சிறியவன்)
கிருஷ்ணவேணி	ஸரோஜா (பெரியவள்)
ரத்னபாப்பா	ஸரோஜா (சிறியவள்)
மோஹன்	விஜயன்
ரெங்கசாமி அய்யங்கார்	மஞ்சுவின் தகப்பனர்
ராமகிருஷ்ண ராவ்	கொண்டல் ராவ்
ஜி. வி. சர்மா	ராமய்யா
வெங்கட்	ஏ. எல். கம்
சதாசிவ ராவ்	ஆபீஸ் மானேஜர்
ஜி. எஸ். பிந்துமாதவன், முகர்ஜி	ஸப் இன்ஸ்பெக்டர்கள்
ஈஸ்வரலால்	சேட்
விஜய ராவ்	சுப்பண்ணு
சக்குபாய்	நாகம்மா
ராம்குமார்	கார் சொந்தக்காரர்

கதைச் சுருக்கம்

வாய்க்கும் கைக்கும் போதாமல் வாழ்க்கை நடத்தும் எண்ணற்ற குமாஸ்தாக்களில் கோபுவும் ஒருவன். கை நிறையப் பணம் சம்பாதிக்காத போதிலும், மனம் நிறைந்த சந்தோஷத்துடன் தன் இளம் மனைவி மஞ்சுளாவுடனும், இரு குழந்தைகளுடனும் குடும்பம் நடத்துகிறான். அவனுடைய அமைதியைக் குலைக்க சத்துருக்களாய் வந்து சேருகிறார்கள் அவனுடைய தாய் வெங்கம்மாளும், தங்கை காமாட்சியும். விவாகமாகியும் புருஷன் வீடு போகாத காமாட்சி, தன் புருஷன் சீதாராமனைத் தன் கூடவே இழுத்துக்கொண்டு வந்து சேருகிறாள்.

எதிர்பாராமல் மூவர் நிரந்தர விருந்தினராய் வந்து தங்கிவிடவே கோபுவின் பொருளாதார நிலைமை தலை குப்புறக் கவிழ்ந்து விடுகிறது. இருப்பதை யெல்லாம் விற்று விருந்தினரை உபசரிக்கிறார்கள் இளந் தம்பதிகள்.

பொறாமையும், அசூயையும் கொண்ட காமாட்சி, வீட்டில் கலகப் புயலைக் கிளப்பி விடுகிறாள். கையில் கிடைத்த பணத்தை யெல்லாம் திருடிச் சேர்த்துக்கொண்டு விடுகிறாள். இந்த சமயத்தில் மஞ்சுளா பிரசவத்துக்காக ஆஸ்பத்திரியில் இருக்கிறாள். அவளை அழைத்துவரக் கையில் பணம் இல்லாமல், கோபு, வேறு வழியின்றி அவளுடைய மாங்கல்யத்தை விற்று வீட்டில் பணத்தை வைத்து விட்டுப் போகிறான். அந்தப் பணத்தையும் காமாட்சி சுருட்டி விடுகிறாள். பட்ட காலிலே படும் என்றபடி ஆபீசுக்குப்போன கோபுவுக்கு வேலையும் போய்விடுகிறது. வீட்டுக்கு வந்து பார்த்தால் வைத்திருந்த பணத்தைக் காணவில்லை. புத்திக் குழப்பம் அடைந்த கோபு வீட்டைவிட்டு வெளியேறி விடுகிறான். ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்த மஞ்சுளா நாலுபக்கமும் கடன்காரர்கள் பிடுங்க நிர்க்கதியான நிலையில் இருக்கிறாள்.

கிராமத்தில் கோபுவின் தம்பியான வேணு விவசாயம் செய்து கொண்டிருக்கிறான். சென்னையிலிருந்து வந்த கமலா என்ற ஒரு காலேஜ் பெண்ணின் சினேகம் அவனுக்குக் கிடைக்கிறது. மஞ்சுவின் நிர்க்கதியான நிலையைப்பற்றி அந்தப் பெண் அவனுக்குத் தகவல் கொடுக்க, அவன் சென்னைக்கு வருகிறான். வந்து காமாட்சி சேர்த்துவைத்திருந்த பணத்தை பலாத்காரமாக எடுத்து அதைக்கொண்டே கோபுவின் கடனை யெல்லாம் தீர்க்கிறான். கோபம் அடைந்த காமாட்சி வேணுவுக்கும் மஞ்சுவுக்கும் கள்ள நட்பு உண்டென்று பொய்யாகப் பழி சுமத்துகிறாள். அதைக்கேட்ட வேணுவின் காதலியான கமலா கோபித்துக்கொண்டு போய்விடுகிறாள். தன்னால் கஷ்டம் வந்ததேயென்று மனம் உடைந்த



மஞ்சு தன் மூன்று குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு வீட்டைவிட்டுக் கிளம்பி விடுகிறாள்.

மஞ்சு போகும்போது எழுதிய கடிதத்திலிருந்து கமலாவுக்கு உண்மை தெரிகிறது. பிறகு, வேணுவும் அவளும் ஒன்றுசேர்ந்து மஞ்சுவையும் கோபுவையும் தேடுகிறார்கள். மஞ்சு கோயம்புத்தூரை யடைந்து ஒரு குடிசையில் வசிக்கிறாள். தன் குழந்தைகளைப் பிச்சையெடுத்து வரச் சொல்லிப் பிழைக்கிறாள். ஏழு வருஷங்கன் கழிகின்றன.

கமலாவின் தந்தை கோயம்புத்தூரில் ஒரு மில் வாங்கவே, கமலாவும் வேணுவும் அங்கே வந்து வசிக்கின்றனர். மஞ்சுவின் மூத்த பிள்ளையான பாலு அதே மில்லில் வந்து வேலைக்கு அமருகிறான். பரதேசியைப்போல் ஊர் ஊராய் அலைந்த கோபு கடைசியில் கோயம்புத்தூர் வந்து சேருகிறான். அவனை சந்தித்த பாலு, பிச்சைக்காரன் என்று நினைத்து அவனுக்கும் அந்த மில்லில் வேலை வாங்கிக்கொடுக்கிறான். தந்தையும் மகனும் தங்களை அறியாமலே நட்புக்கொள்ளுகிறார்கள். ஒரு நாள் கோபுவுக்கு ஜுரம் வரவே அவனைப் பாலு தன் குடிசைக்கு அழைத்துவருகிறான். அவனைக் கண்டதும் மஞ்சு அடையாளம் கண்டுகொள்ளுகிறாள். அவளுடைய சந்தோஷம் எல்லை மீறுகிறது. ஆனால் அவனுடைய உடல் நிலையைக்கண்டு பரிதபித்து டாக்டரை ஓடிப்போய் அழைக்கிறாள். 50 ரூபாய் இருந்தால் தான் வரமுடியும் என்று டாக்டர் சொல்லவே, பாலுவின் முதலாளியான கமலாவின் தந்தையைப் போய்க் கேட்கிறாள். அவர் மறுத்துவிடவே அவளுக்கு இருந்த மனோநிலையில் ஒரு கழியை எடுத்து அவர் தலையில் போட்டு அடித்துவிட்டு அவருடைய பணப்பையை எடுத்துக்கொண்டு வந்து, டாக்டரிடம் பணத்தைக் கொடுத்து அவரை அழைத்து வருகிறாள்.

இந்த சமயத்தில் வீட்டுக்குள் நுழைந்த வேணுவின்மேல் மில் முதலாளியை அடித்த குற்றம் சுமத்தப்படுகிறது. கோபுவின் உடம்பு குணம் ஆகிறது. புருஷனும் மனைவியும் ஒன்று சேருகிறார்கள். அப்போது தான் செய்த குற்றத்துக்காக வேணு கைது செய்யப்பட்டதைக் கேள்வி யுற்ற மஞ்சு போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடிப்போய் குற்றத்தை ஒப்புக் கொள்ளுகிறாள். அப்போது அங்கே வந்த கமலாவின் தந்தை வழக்கை வாபஸ் பெறவே மஞ்சு விடுதலை யடைகிறாள். பிறகு பிரிந்தவர் கூடுகிறார்கள். சுப முகூர்த்தத்தில் வேணுவுக்கும் கமலாவுக்கும் திருமணம் நடந்தேறுகிறது.

SAMSÁRAM

A Gemini Picture

GOPU, employed as a clerk, is living in the city with his wife and two children. In the village his mother hears of his happy existence and comes to the city with her daughter. With their entry trouble begins in the family.

Family responsibilities drive Gopu into debts. Critical times compel him to dispose off the little he had, but he is robbed of that too. Distracted after losing his job, he runs away from the house, while his wife is in the hospital. His wife, after recovery, learns of this shocking news and goes in search of him with her children.

Gopu's brother, Venu, is living in the village. Every time he tries to help his brother by removing the trouble spots in Gopu's existence, namely his mother and sister, he fails. He accidentally meets a mill-owner's daughter, Kamala, who reciprocates his love for her. But Venu does not think of marriage until he could re-establish his brother's family.

Years pass. Gopu joins as a worker in the mill in which both his brother as well as his grown-up son are employed. The joke of Providence being that one does not know the other. Gopu falls ill. The boy feels kindly to him and takes him to his house. But here fate is kind and the family is united again. But at what cost?

Gopu's illness compels his wife to secure some money to pay the Doctor. She fails in her pleadings with her son's master and in a moment of wrath she incapacitates him and robs him of his purse when he is alone. Circumstantial evidence incriminates Venu of the crime of having assaulted the mill owner and at the police court he and his sister-in-law meet face to face and each pleads guilty to the charge in order to save the other. The mill-owner intercedes and withdraws the charge, thereby enabling the family to be reunited.

Meantime, the sister of Gopu, who with her nincompoop husband plays a considerable part in the ruination of the family, is brought back to her senses along with her mother, on account of the whip-cord her husband ultimately uses.

பாட்டுகள்

(1)

சம்சாரம் சம்சாரம்
சகல தர்மஸாரம் ஸுகஜீவன ஆதாரம் (சம்)

கணவன் மனைவி ஒன்றாய் இரு
கண்ணும் மணியும் போலே
இணைபிரியாது இளம் பாலகர் விளையாடும் (சம்)

உறவோடு உண்ணவேண்டும்
ஊரோடு வாழ வேண்டும்
பெரியோரைப் பணிய வேண்டும்
சிறியோரைக் காக்க வேண்டும் (சம்)

சம்சார சாகரத்தில் துயர்
தாங்கொணாத போதும்
தாரமோடு கணவன் அதைத்
தாங்கி வாழ வேண்டும் (சம்)

(2)

வேணு: ஆத்தோரம் நடந்து போகும் அன்ன நடைக்காரி
ஆவாரம் பூவைப்போலே அழகுச் சிங்காரி
பக்கத்திலே நீ இல்லையேல் சர்க்கரை கசக்குதடி
பாயாசம் துவர்க்குதடி பாலும் புளிக்குதடி
விக்கையிலே சொக்குதடி என் மாமன் மகளே — உன்னை
நினைத்தாலும் இனிக்குதடி என் மாமன் மகளே.

(3)

வண்டிப்பாட்டு — கோரஸ்

கமலா: கடகட கடகட லொடலொட வண்டி
மாடு ரெண்டும் சண்டி ஓ...
வண்டிக்காரன் நொண்டி (கட)



தலைவலியாகும் மயக்கமுண்டாகும்
எலும்பு நொறுங்கி ஒடிஞ்சு போகும் ஏய்
பாதையை விலக்கியே ஓட்டு
உங்க பாட்டன் விட்டுதா ரோட்டு? ஓட்டு (கட)

வேணு: பாம்......பாம்......பாம்
துருபுரு டுருபுரு மோட்டாரு வண்டி
துருப்பிடிச்ச வண்டி சர்ருனு பாயும்
சாஞ்சால் குடைசாயும்
திங்கிறது காத்து குடிக்கிறது எண்ணை
தீவட்டி போலே கண்களே சும்மா
சிரிக்கிறதேனோ பெண்களே

கமலா: மாட்டு வண்டி தலைவலி கடபுட சத்தம்
ஆட்டம் போடும் ஓடினால்

வேணு: கண்ணை மறைக்கும் மண்ணை இறைக்கும்

கம: பைத்தியம் சும்மா ஓட்டு

வேணு: தண்ணியைக் கண்டால் தாளம் போடும்

கம: தம்பியே சும்மா ஓட்டு

வேணு: உங்க பாட்டன் வீட்டுதா ரோட்டு

கம: ஏய் பாதையை விலக்கியே ஓட்டு – ஓட்டு (கட)

(4)

ரஞ்சனி

மஞ்சு: அம்பா ஸ்ரீ துளசி அருள் செய்வாய் அம்மா
உன் பதமே தாரகமே செந்திருவே தேவீ (அ)

நம்பி உனை சேவித்தால் துன்பமெலாம் தீருமே
அம்பா நீயே சரணம் தேவீ (அ)

ஆரபி

பெண்களுக்கே உன்னால் பெருமை யன்றோ
பேரருளே தாயே
பேதை எனக்கு சௌபாக்யமும் நீயே ஆதிகாரணி தேவீ (அ)

ஷண்முகப்ரியா

ஸ்ரீ ஹரி ரமணி தேவி துளசி
சிந்தையில் ஆனந்தம் தந்தே அருள்வாய்
அன்னையும் தந்தையும் தெய்வமும் நீயே
ஆதரவுன்பாத மலரே தேவி (அ)

(5)

வேணு; பட்டுச் சேலை கட்டி நெத்தி பொட்டு வச்சு போற பொண்ணே
பட்டணத்துக் காரிலேறிப் பறந்து போன மாயமென்னே?
கரும்பைப் போல சொல்லு—முல்லை அரும்பைப் போல பல்லு
இரும்பைப் போலே நெஞ்சை மட்டும் ஏம்படைச்சான்
[பெண்களுக்கே (கரு)

(6)

வேணு; கண்களைக் காக்கின்ற இமைகளைப் போலவே
பெண்களை கணவன்மார் காக்க வேண்டும்
நின்னாலும்நடந்தாலும் நீங்காத நிழல் போலே
எந்நாளும் மனைவி இருக்க வேண்டும்

(7)

கிளப் டான்ஸ் — பாட்டுகள்

ரதி மன்மதா

மன்மதா: கண்ணோடு கண்நோக்கிக் கருத்தொன்று சேர்ந்தால்
ரதி: என்னாளும் புவிமீது இன்பம் உண்டாமே



கோரஸ்: மதியாவது நாமே
நிலவாவதுமே நாமே
மலராவது நாமே
மலர் வீசும் மணமாவது நாமே

ரதி மன்மத: கீதம் வேறானாலும் நாதம் ஒன்றேதான்

கோரஸ்: என்னாளும் புவிமீது இன்பன் அன்பாலே

சாகுந்தலம்

சகுந்தலா: வில்லம்பு ஏந்தி வனவேட்டைக்கு வந்த உங்கள்
விழியம்புக்காளாகி விரகமிகுந்தேன் நான்
வண்டோட்ட வந்த மன்னா மாரனது கணையாலே
திண்டாடும் பேதை எனை திரும்பிவந்து காரீரோ

துஷ்யந்தன்: கண்ணுவரின் பெண்ணரசே கற்பகமே இன்னமுதே
கணையாழி சூட்டுகின்றேன் இணைபிரியோம் என்னாளும்
காலமது உள்ளமட்டும் நம் காவியம் நிலைத்திடவே.

அநார்கலி

அநார்கலி: ராஜா ஸலீமிடம் என் ஆசை சலாமை உரைப்பாயே
சென்றாள் உன் காதல் அநார் இனித் திரும்பாள் என உரைப்பாய்
என்றேனும் மறு உலகில் இன்புறுவோம் என உரைப்பாய்.

ஸலீம்: என் அன்பே அநார்கலியே அழகே அருமைக் காதலியே
மெய்யான காதலினால் விளையும் இன்பம் இதுதானோ
அந்தோ உனைப் பிரிந்தும் அரசையாள வாழ்வேனோ.

அநார்கலி: என்றேனும் மறு உலகில் இன்புறுவோம் என உரைப்பாய்

மார்வாரி

பெண்: இப்பட்டாலே முகத்தை மூட கட்டாயஞ் செய்யாதே
அடி பூவைப்போலே பொண்ணை யெண்ணி
போத்தி வைக்கிருங்க
காப்பாத்தி வைக்கிருங்க
ஓ ஹோ ஹோ இது அதிசயந்தானே

ஆண்: கண்ணே உனை இன்னொருவர் காண
விடுவேனோ, விடுவோமோ இனி நாமே
கண்ணாலே வேறொருவர் காண
விடுவோமோ இனி நாமே

பெண்: தன்னாசையாலே பெண்ணை உங்கள்
அடிமை என்றெண்ணாதீர்

ஆண்: வீண் பிடிவாதஞ் செய்யாதீர்

பெண்: திரை போட்டு வைக்கலாமோ
தெரிந்தால் அழகு போமோ
ஓ ராஜா உந்தன் ஆசையிதுதானே

(8)

சீதாராம்; அடி காமாட்சியே எந்தன் கண்ணே
என்னை ஏமாத்தாதே பெண்ணே (அடி)

காமாட்சி; ஐய்யய்யய்யய போங்க

சீதா; மம்மம்மமமம்மம்மா

காமா; லல்லல்லல்ல லாவிலே

சீதா; அப்பப்பப்பபபபா எப்போ

காமா; போங்க போங்க ஊருக்குப் போங்க அங்கே
போனவர் ஏன் வரவேணும்
போதும் போதுமே பொஞ்சாதிமேலே
ஆசை ரொம்பத்தான் போங்க விசு
வாசம் ரொம்பத்தான் போங்க (அடி)

சீதா: அடி கண்ணே கல்கண்டே
காப்பு வேணுமா தங்கக் காப்பு வேணுமா
பாவாடை வேணுமா – மேலாக்கு வேணுமா
பட்டாடை வேணுமா
அடி கண்ணே கல்கண்டே என் ஆசை மோகினி

காமா; ஒண்ணும் வேண்டாமே தாசா
பண்ண வேண்டாமே
நின்று பேசுங்க அப்படி நின்னே பேசுங்க
சீதா; ஏன்?

காமா; உங்க – உல்லாசப் பேச்சுக்கும்
சல்லாப வீச்சுக்கும் இல்லாத மொட்டைக்கும்
நானு மயங்கிடுவேன்
நின்னு பேசுங்க

சீதா; அங்கிட்டு இங்கிட்டுப் போகாமலே
அடுப்பைச் சுத்தற பூனையைப்போலே
உங்கிட்ட பக்கத்தில் தானே நானே
ஒய்யாரமா யிருப்பேனே மானே
ஓடிவருவேன் ரயிலுபோலே -
நீயே என் கைகாட்டி அடி கண்ணுட்டியே
வாழ்வின் கைகாட்டியே

காமா: காத்திருந்தேனே வழி பார்த்திருந்தேனே
கண்ணாளனே நானே என்ன சொல்லுவேனே
காத்தடித்தாலே அரும்பு பூத்தது போலே
கண்டு மகிழ்ந்தேனே கண்ணாளனே நானே

(9)

வறுமையின் கொடுமையாலே வேந்தரும் வீழ்வாரந்தோ
அருமையாய் வாழ்ந்தபேரும் அவலமாய்ப் போவாரன்றோ?
தருமமே உருவமான தமயந்திதனை விடுத்தே
தனிவழி நளனும் சென்றான் தரித்திரக் கொடுமையாலே

(10)

காமலா ; தன தனன தனன தன தானே ஸ ~ தினமிதுதானே
எனது மனம் கனவிலும் நினைவிலும்
கண்டவரைக் கொண்டேனே (தன)

அவர் மெள்ள மெள்ள கிள்ள வருவாரே
நான் தள்ளி விடுவேனே.........
அவர் கெஞ்சிக் கெஞ்சி பேச வருவாரே
நான் மிஞ்சிப் பேசுவேனே
தினமுமிது போலவே நிலவில் விளையாடியே
களிப்புடனே ஆனந்தமாய் வாழ்வோமே (தன)

இனி படிப்பு பாடம் கிடையாதே - முடியாதே
இனி பள்ளிக்கூடம் கிடையாதே - அதி-லேதே
இனி பாடமெல்லாம் அவருக்குத்தானே - படிக்கச் சொல்லுவேனே
இப்பட்டிக்காட்டு மாப்பிள்ளையை - கெட்டிக்காரர் ஆக்கியே
களிப்புடனே ஆனந்தமாய் வாழ்வோமே......... (தன தனன)

(11)

மஞ்சு ; ஏழை எங்கு செல்வேன் ஏழை எங்குசெல்வேன்
ஏ தெய்வமே கதியே இல்லையானல்
பதியைப் பிரிந்த பாவி நான் பாரமே இந்த பூமிக்கே
பாழாக நானே வாழ்வதேனே
பெண்ணுகப் பிறந்த நேரமே எந்நாளுமே விசாரமே
என் பாலர் ஐயோ ஏங்கிவாட (ஏ)

(12)

தாலாட்டு

மஞ்சு ; ஜோ......ஜோ......ஜோ......ஜோ......
ஆராரோ ஆராரோ அருமைக்குமாரா
சீராரும் பாரதத்தின் வருங்காலவீரா (ஜோ)
என்னருமை செல்வமே கண்ணுன கண்மணியே
இந்நாட்டு மன்ன நீ ஏங்கியே அழலாமோ (ஜோ)

தாலேலோ ஏழை எந்தன் தவப்பயனே தாலேலோ
தாயின் சோகம் தீராயோ செல்வக்குமாரா
நீயே என்வாழ்வில் இன்பமே (ஜோ)

(13)

குழந்தைகள் :

அம்மா பசிக்குதே தாயே பசிக்குதே
அம்மா பசிக்குதே தாயே பசிக்குதே
ஆண்டவன் எங்களை மறந்ததுபோலே
அன்னை நீர் மறவாதீர்
வேண்டியதெல்லாம் ஒரு பிடி சோறு
வெறும் சோறாயினும் போதும் (அம்)

உச்சிவெய்யிலில் பிச்சை எடுக்கும்
பச்சைக்குழந்தைகள் பாரும்
ஒரு பிடிசாதம் ஒரு பிடி அரிசி
ஒரு முழக்கந்தை தாரும் (அம்)

பாலும் பழமும் வேண்டாம் தாயே
பசிக்குச் சோறு கிடைத்தால் போதும் (அம்)

பிள்ளை குட்டியை பெற்ற தாய்களே
பிச்சை போட்டு பசிதீரும் உங்கள்
பிள்ளைகளாய் எண்ணிப் பாரும் (அம்)

(14)

பின்னணிப் பாட்டு

மாநிலத்தில் விதியைவென்ற மனிதர் யாருமில்லையே
ஞானியென்ன அரசனென்ன யாருமே விலக்கில்லையே (மா)

ஜானகி ரகுராமனும் வனவாசம் போனது விதியினால்
சந்திரமதியும் அரசிழந்து தாதியானது விதியினால்
வானவில்லின் வர்ணஜாலம் போலவே விதி லீலையே (மா)



இன்பதுன்பம் மாறிமாறி இரவுபகல்போல் வருகுமே
எழுதிவைத்த எழுத்தை மாற்ற ஈசனும் ஆகுமோ
அழுத கண்ணீர்கொண்டு விதியை அழித்தெழுதப் போகுமே (மா)

(15)

கமலா:

ஓஹோ......
அவர் மெள்ள மெள்ள.....
அவர் மெள்ள மெள்ள -- கிள்ள வருவாரே
நான் தள்ளிவிடுவேனே......
அவர் கெஞ்சிக் கெஞ்சி பேசவருவாரே
நான் மிஞ்சிப் பேசுவேனே
தினமும் இதுபோலவே நிலவில் விளையாடியே
களிப்புடன் ஆனந்தமாய் வாழ்வோமே (தன)

ஓஹோ.........
ஸார் வருஷம் ஏழுபோலாச்சே - நாளாச்சே
அந்த பருவம் மாறியே போச்சே - வயசாச்சே
ஸார் வருஷம் ஏழுபோலாச்சே - வெகுநாளாச்சே
அந்த பருவம் மாறியே போச்சே - கொஞ்சம் வயசாச்சே
அப்பா கேட்கிருரே ஜோஸியரைத்தானே
முகூர்த்தம் வைக்கத்தானே
இந்தடீக்கான மாப்பிள்ளைக்கி மாலையிடும் நாளையே
தினமும் எண்ணி ஆனந்தமாய் வாழ்வேனே

(16)

சம்சாரம் சம்சாரம்
சகல தர்மசாரம் சுகஜீவன ஆதாரம் (ச)

கணவன் மனைவி நன்ருய்
இரு கண்ணும் மணியும்போலே
இணைபிரியாது நறுமணமலர்போல் வாழும் (ச)

பிரிந்தவர்கள் கூடி
மன மகிழ்ந்து ஆடிப்பாடி
சிறந்த அன்பு நாடி மனம்போல வாழும் வாழ்வே (ச)

சம்சாரம்

வசனம்	கி. ரா.
பாட்டுகள்	கொத்தமங்கலம் சுப்பு
ஸங்கீதம் மேற்பார்வை	எம். டி. பார்த்தசாரதி
ஸங்கீத டைரக்டர்	ஏமணி சங்கர சாஸ்திரி
நடன டைரக்ஷன்	ஜெய சங்கர் நாயக் ஏ. கே. சோப்ரா நடனம் நடராஜ்
உதவி	எம். ராமமூர்த்தி
ஆர்க்கெஸ்ட்ரா	ஜெமினி
ஆர்ட் டைரக்ஷன்	ஸையத் அஹமத்
உதவி	ஏ. எஸ். மேனன்
ஆடை அலங்காரம்	எம். ஜனார்தன ராவ் டி. என். ராமமூர்த்தி ஏ. கோவிந்தன்
அரங்கம் (மேற்பார்வை)	எம். எஸ். ஜானகிராம்
அரங்க நிர்மாணம்	பி. ஆர். நாராயணஸ்வாமி
உதவி	ஜி. ஆறுமுகம்
காட்சி அலங்காரம்	ஜே. ஞானயுதம்
உதவி	எம். சகாதேவன் ஜி. எச். ஏ. புஷ்பராஜ்
அரங்க அலங்காரம் ...	கே. பி. சங்கரன் குட்டி என். ஜே. கன்னையா

மேக்-அப்	... ...	ரகாதேவ ராவ் எஸ். தப்கிரே
உதவி	... ...	பி. ராமகிருஷ்ண ராவ் பி. வி. வி. பிள்ளை என். பி. சிவராமன்
ஒளிப்பதிவு டைரக்டர்	... ...	பி. எல்லப்பா
ஒளிப்பதிவாளர்	... ...	டி. வி. லிங்கநாகூக்
உதவி	... ...	ஆர். வி. புருஷோத்தமன்
லைட்டிங்	... ...	எம். கே. கண்ணன்
ஸ்டில்	... ...	எல். கே. ராவ்
ஒலிப்பதிவு டைரக்டர்	... ...	ஸி. ஈ. பிக்ஸ்
ஒலிப்பதிவாளர்	... ...	என். ஸி. காந்தி
உதவி	... ...	கே. ஸி. சேகர் ஜி. சுந்தரராமன்
ரிக்கார்டிங்	...	ஆர். ஸி. ஏ. ஸவுண்ட் ஸிஸ்டம்
எடிட்டிங்	... ...	எம். உமாநாத ராவ்
உதவி	... ...	ஜே. பாலகிருஷ்ணன் ஏ. பரமசிவம்
புரோஸஸிங்	... ...	வி. ராமஸ்வாமி
உதவி	... ...	ஆர். ரெங்கஸ்வாமி வி. ராதாகிருஷ்ணன்
ஸ்டுடியோ	... ...	ஜெமினி
டைரக்ஷன்	... ...	சந்துரு
உதவி	... ...	கிட்டப்பா
கண்டினுடி அஸிஸ்டெண்ட்	... ...	குமரவேலு

ஜெமினி தயாரிப்பு

ஆனந்த விகடன்
பிரஸ், சென்னை.